Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 175/2024 PW-1**

Name : நிர்மலா
Father / Husband name : லோகநாதன்
Village : திண்டிவனம்
Age : 40

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.03.2026

Accused produced from judicial custoday. Defence counsel present. HC 1465 present and Indendtify the witness.

**முதல் விசாரணை**

நான் வேலை எதுவும் செய்யவில்லை. சாட்சி லோகநாதன் எனது கணவர். சாட்சிடி பிரவீன் எனது மகன். சாட்சி டில்லிபாபு எனது அண்ணன். ஆஜர் எதிரி எனது நாத்தனார் மகன். கடந்த 2023 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் இரவு சுமார் 7 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எதிரி வீட்டினுள் வந்து என்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது எதிரிக்கும் எனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. அந்த சமயத்தில் எனது மகன் வீட்டில் இருந்தார். எனது கணவர் வெளியில் சென்றிருந்தார். அந்த சமயம் எதிரி அவரின் கையால் எனது கையில் அடித்தார். பின்னர் அங்கிருந்த எனது மகனை ஆஜர் எதிரி கையால் வாயில் அடித்துவிட்டார். சத்தம் கேட்டு அக்கம் பக்கம் இருந்தவர்கள் வந்தார்கள். அடிப்பட்ட என்னையும் எனது மகனையும் எனது கணவர் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். பின்னர் சம்பவம் சம்மந்தமாக டவுன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் நான் சொல்லி எனது வழக்கறிஞர் எழுதினார். **புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. தற்போது நாங்கள் சமாதானமாக செல்கிறோம்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி**

**கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக உங்கள் தரப்பிலும் எதிரி தரப்பிலும் சமாதானமாகிவிட்டோம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமாதான மனுவில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 01.11.2023 அன்று இரவு சுமார் 8 மணியளவில் நான் எனது கணவர், மகன் ஆகியோர்கள் வீட்டிலிருந்தபோது எதிரி குடித்துவிட்டு வீட்டினுள் அத்துமீறி நுழைந்து உங்களை தகாத வார்த்தையால் திட்டி, அவர் கையில் போட்டிருந்த காப்பால் உங்கள் மகனின் முகத்தில் ஓங்கி குத்தினார் என்றும், மறித்த உங்களையும் உங்கள் கணவரையும் அடித்து உதைத்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், எனக்கு வெளிப்புறம் காயம் இல்லாததால் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை, எனது மகன் மற்றும் கணவர் சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள் என்று போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எனது உறவினர் என்றால் சரிதான். எதிரியின் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். அதன்காரணமாக அவரின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை அடித்ததில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் கையில் ஏற்பட்டது. அதன்பின்னர் இருதரப்பினரும் பெரியோர்கள் முன்னிலையில் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 175/2024 PW-2**

Name : லோகநாதன்
Father / Husband name : ஏழுமலை
Village : திண்டிவனம்
Age : 44
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.03.2026

Accused produced from judicial custoday. Defence counsel present. HC 1465 present and Indendtify the witness.

**முதல் விசாரணை**

நான் பிளம்பர் வேலை செய்கிறேன். அசா.1 நிர்மலா எனது மனைவி. சாட்சி பிரவீன் எனது மகன். சாட்சி டில்லிபாபு எனது மச்சான். ஆஜர் எதிரி எனது அக்கா மகன். சுமார் 3 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் இரவு சுமார் 08.00 - 08.30 மணியளவில் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது அக்கம் பக்கம் இருந்தவர்கள் எனது வீட்டில் எதிரிக்கும் எனது மகனுக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னார்கள். பின்னர் நான் எனது மகனை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது மகனுக்கு கழுத்து மற்றும் கையில் காயம் இருந்தது. இதுகுறித்து எனது மகனிடம் கேட்டபோது ஆஜர் எதிரி அடித்துவிட்டதாக சொன்னார். சம்பவம் சம்மந்தமாக எனது மனைவி புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக உங்கள் தரப்பிலும் எதிரி தரப்பிலும் சமாதானமாகிவிட்டோம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமாதான மனுவில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர் என்றால் சரிதான். இந்த வழக்கு

சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 01.11.2023 அன்று இரவு சுமார் 8 மணியளவில் நீங்களும் உங்கள் மனைவி மற்றும் மகன் ஆகியோர்கள் வீட்டிலிருந்தபோது எதிரி குடித்துவிட்டு வீட்டினுள் அத்துமீறி நுழைந்து உங்கள் மனைவியை தகாத வார்த்தையால் திட்டி, அவர் கையில் போட்டிருந்த காப்பால் உங்கள் மகனின் முகத்தில் ஓங்கி குத்தினார் என்றும், மறித்த உங்களையும் உங்கள் மனைவியையும் அடித்து உதைத்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அதில் உங்களுக்கும் காயம் ஏற்பட்டு நீங்களும் உங்கள் மகனும் சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்று போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 175/2024 PW-3**

Name : பிரவின்
Father / Husband name : லோகநாதன்
Village : திண்டிவனம்
Age : 21
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.03.2026

Accused produced from judicial custoday. Defence counsel present. HC 1465 present and Indendtify the witness.

**முதல் விசாரணை**

நான் எலக்ட்ரிசியன் வேலை செய்கிறேன். அசா.1 நிர்மலா எனது அம்மா, அசா.2 லோகநாதன் எனது அப்பா. சாட்சி டில்லிபாபு எனது மாமா. ஆஜர் எதிரி எனது அத்தை மகன். சுமார் 3 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் இரவு சுமார் 10.30 மணியளவில் நானும் எனது அம்மாவும் வீட்டிலிருந்தபோது கரண்ட் கட்டாகிவிட்டது. நான் வீட்டிற்கு வெளியில் வந்தபோது இருட்டில் யாரோ என்னை பின்னந்தலையில் அடித்துவிட்டார்கள். என்னை யார் அடித்தார்கள் என்று தெரியாது. அதில் நான் மயக்கமாகிவிட்டேன். எனது அப்பா வீட்டிற்கு வந்து என்னை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக உங்கள் தரப்பிலும் எதிரி தரப்பிலும் சமாதானமாகிவிட்டோம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமாதான மனுவில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது

கடந்த 01.11.2023 அன்று இரவு சுமார் 8 மணியளவில் நீங்களும் உங்கள் அப்பா, அம்மா ஆகியோர்கள் வீட்டிலிருந்தபோது எதிரி குடித்துவிட்டு வீட்டினுள் அத்துமீறி நுழைந்து உங்கள் அம்மாவை தகாத வார்த்தையால் திட்டி, அவர் கையில் போட்டிருந்த காப்பால் உங்களின் முகத்தில் ஓங்கி குத்தினார் என்றும், மறித்த உங்கள் அப்பா, அம்மாவையும் அடித்து உதைத்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அதில் உங்களுக்கும் காயம் ஏற்பட்டு நீங்களும் உங்கள் அப்பாவும் சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்று போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.